Name of the Newspaper ........Dinamalar........................ Date: 14.4

# மெட்ரோ ரயில் டிக்கெட் புதிய, 'ஆப்' அறிமுகம்

சென்னை, ஏப். 14–

மெட்ரோ ரயிலில் டிக்கெட் எடுப்பதற்காக, எஸ்.பி.ஐ., வங்கி, யு.பி.ஐ., வசதியில், புதிய, 'ஆப்'பை அறிமுகம் செய்துள்ளது.

சென்னையில், மெட்ரோ ரயில் பயணியர் வருகையை அதிகரிக்க, மெட்ரோ ரயில் நிர்வாகம், பல்வேறு ஏற்பாடுகளை செய்து வருகிறது. மெட்ரோ ரயிலில், 'டோக்கன்' வாங்கியும், 'டிராவல் கார்டு' வாங்கியும் பயணம் செய்யலாம். 'டிராவல் கார்டு' வசதியில், 10 சதவீதம், டிக்கெட் கட்டண சலுகை அளிக்கப்படுகிறது.

இந்த வசதிகளுடன், பணமில்லா பரிவர்த்தனையை ஊக்குவிக்கும் நோக்கில், மெட்ரோ ரயில் நிறுவனமும், எஸ்.பி.ஐ., வங்கியும் இணைந்து, யு.பி.ஐ., வசதியிலான புதிய ஆப், அறிமுகம் செய்துள்ளது.

இந்த வசதியை, மொபைல்போனில், 'கூகுள் பிளே ஸ்டோரில்' பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு செல்லும் போது, க்யூ.ஆர்., கோடு மூலமும், வி.பி.ஏ., வசதியிலும், எஸ்.பி.ஐ., உள்ளிட்ட எந்த வங்கி கணக்கு வைத்திருந்தாலும், டிக்கெட்டுக்கான தொகை செலுத்த முடியும்.

இந்த தொகை செலுத்தியதும், இந்த பதிவு, மெட்ரோ ரயில் நிறுவனத்திற்கு சென்றுவிடும், கவுன்டரில் இருப்பவர், உடனே, 'டிராவல் கார்டு' கொடுத்துவிடுவார். இதனுடன், ரயிலில் பயணம் செய்யலாம்.

புதிய, 'ஆப்' வசதியை பயன்படுத்தி, பயணியே, டிக்கெட் கவுன்டருக்கு அருகில் இருந்து, 'டிராவல் கார்டு' ரீசார்ஜ் செய்து கொள்ளலாம். இப்புதிய வசதி, முதல்கட்டமாக, 13 மெட்ரோ ரயில் நிலையங்களில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இப்புதிய வசதி குறித்து, தகவல் பெற விரும்புவர்கள், கோயம்பேடு, சி.எம்.பி.டி., அரும்பாக்கம், வடபழனி, அசோக்நகர், ஈக்காடுதாங்கல் மற்றும் ஆலந்துார் நிலையங்களில், எஸ்.பி.ஐ., வங்கி, ஊழியர்களிடம், கேட்டு தெரிந்து கொள்ளலாம்.